## இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் - 2017

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானச் செலவினக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ் அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

கணக்காய்வின் போது பின்வரும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 71 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட நேரடி விடயங்கள் தொடர்பாக போதுமான வெளிப்படுத்தல்கள் குறிப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் பதிவளிக்கப்பட வேண்டியதன் காரணமாக மீதிகளாக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 81,769,596 பெறுமதி தொடர்பாக போதியளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

(i) உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த ரூபா 880,001 பெறுமதியான முன்னைய ஆண்டுத் தவறுகளின் திருத்தம் மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நட்டத்திற்கு சீராக்கம் செய்யப்படாமல் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் தவறுதலாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் கொள்வனவிற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 188,369,560 ஆக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து எழுகின்ற காசுப்பாய்ச்சல்களின் கீழ் அது ரூபா 194,797,384 ஆகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து எழுகின்ற காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 6,427,824 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) 2018 ஆம் ஆண்டிற்காக அதே வருடத்தில் பெறப்பட்ட ரூபா 5,790,020 தொகையான அமைச்சின் மானியம் மீளாய்வாண்டின் நிதி நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### (இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03

(i) கூட்டுத்தாபனத்தால் 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அகழ்வு இயந்திரமொன்றிற்காக (Excavator) 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 8,800,000 முற்பணத்தை மூலதனமாக்கும் போது ஏற்பட்ட தவறை சீர்செய்யும் போது நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டிற்கான ஒப்பீட்டு தொகைகள் மீளக் குறிப்பிடப்பட்டு சீர்செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 54 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனமானது முன்னைய ஆண்டுத் தவறுகளை சீர்செய்வது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்களை மேற்கொண்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றை எதிர்பார்க்கப்பட்ட பயன்படுத்தும் நிலைமைக்கு கொண்டுவரும் வரையான செலவினம் மாத்திரமே அதன் கிரயத்திற்கு மூலதனமாக்கப்படக் கூடியதாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் பாரந்தூக்கிகளின் (mobile cranes) சாரதிகளின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளிற்காக ஏற்பட்ட ரூபா 730,000 செலவினத்தை கூட்டுத்தாபனம் மூலதனமாக்கியிருந்தது.

(ii) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடியதாக உள்ள போது ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக பயன்பாட்டிற்குக் கிடைக்கக்கூடிய திகதியை கருத்தில் கொள்ளாமல் கொள்வனவு செய்யப்படும் ஆண்டிற்காக சொத்துக்களை பெறுமானத்தேய்விடும் கொள்கையொன்றை கூட்டுத்தாபனம் இனங்கண்டிருந்தது. எவ்வாறாயினும் கொள்வனவு செய்த திகதியையும் கருத்தில் கொள்ளாமல் ரூபா 6,373,607,912 கிரயமான சொத்துக்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா 226,611,131 இற்கு பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 70 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காரணிகளை கருத்தில் கொண்டு சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தால் தொழில்நுட்ப காரணங்களின் அடிப்படையில் வழக்கொழிதலிற்கு உட்படுத்தப்படுகின்ற கணனி உப பாகங்கள் 10 ஆண்டுகள் காலப்பகுதியொன்றிற்கு பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும் ரூபா 30,209,500 பெறுமதியான மண் மூட்டைகளை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர் தடுப்பின் பயன்தரு ஆயுட்காலம் கற்களால் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர் தடுப்பின் பயன்தரு ஆயுட்காலமாக கருத்தில் கொண்டு 40 ஆண்டுகளிற்காக பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தால் அரசாங்க மானியங்களை கணக்கீடு செய்தல் தொடர்பாகவும் காலக்கழிவிற்கான சீராக்கம் தொடர்பாகவும் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐயக்கடனிற்கான ஏற்பாடுகளை கணக்கீடு செய்தல் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கடன்பட்டோரிலிருந்து ஐயக்கடனிற்கான ஏற்பாட்டுத் தொகையை இனங்கண்டுகொள்ளும் முறை கொள்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ரூபா 12,468,207 தொகை மீளாய்வாண்டிற்கான ஐயக்கடன் ஏற்பாடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தால் ஆதனங்கள் குத்தகைக்கு வழங்கப்படுவதன் மூலம் ரூபா 37,846,862 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் குத்தகைக்கு வழங்கப்பட்ட ஆதனத்தை கணக்கீடு செய்வதற்கான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது துறைமுகத்தில் 03 நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 8,699,100 தொகை மற்றும் தரவுப் பரிமாற்ற முறைமை மென்பொருள் பொதிக்காக செலவிட்பட்ட ரூபா 1,760,000 தொகை என்பன மூலதனமாக்கப்படாமல் நடைமுறை வேலையின் கீழ் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.

(ஆ) திக்கோவிட்ட மீனபிடித் துறைமுகத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்ட எரிபொருள் இருப்பு 64,183 லீற்றர்களாக இருந்த போதிலும் இது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் 75,340 லீற்றர்களாக காட்டப்பட்டிருந்ததனால் எரிபொருளின் இறுதி இருப்பு மீளாய்வாண்டில் ரூபா 1,028,117 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டுக்குரிய சிட்டையிடப்பட்ட மதியுரை வருமானம் ரூபா 2,048,728 ஆகக் காணப்பட்ட போதிலும் வருமானக் கூற்றில் அவ் வருமானம் ரூபா 598,067 ஆக ரூபா 1,450,661 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) ஐயக்கடன்களை கணிப்பீடு செய்யும் போது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி ரூபா 376,215,940 ஆக இருந்த போதிலும் ரூபா 391,107,303 ஆக கடன்பட்டோர் மீதி கவனத்தில் கொள்ளப்பட்டு ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனால் உள்ளபடியான கடன்பட்டோர் மீதியை விட ரூபா 14,891,363 ஆக கடன்பட்டோர் மீதி கருத்தில் கொள்ளப்பட்டு ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 255,095 ஆல் ஐயக்கடன் ஏற்பாடு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான வங்கிக் கணக்குகளின் மீதிகள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட காசேட்டின் மீதிகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்றின் மீதிகள் என்பவற்றிற்கிடையே பின்வரும் வேறுபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன.

| விபரம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் மீதி | திருத்தப்பட்ட காசு மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நீர்கொழும்பு எரிபொருள் கணக்கு – 8354 | 5,877,850 | 6,664,597 | 786,747 |
| புராணவெல்ல எரிபொருள் கணக்கு | 8,798,133 | 9,998,112 | 1,199,979 |
| குடாவெல்ல எரிபொருள் கணக்கு | - | 8,589,837 | 8,589,837 |

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விசேட காசு முற்பண மீதி ரூபா 16,876,317 ஆகக் காணப்பட்டதுடன் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் இது ரூபா 17,023,273 ஆகக் காணப்பட்டதனால் ரூபா 146,956 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முன்னரே செலுத்தப்பட்ட மீதி ரூபா 36,622,577 ஆகக் காணப்பட்ட போதிலும் பட்டியல்களின் பிரகாரம் இது ரூபா 36,737,057 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 114,480 வேறுபாடு சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நங்கூரமிடும் கட்டணக் கடன்பட்டோர் மீதி ரூபா 10,855,674 ஆகக் காணப்பட்ட போதிலும் பட்டியல்களின் பிரகாரம் அவற்றின் மீதி ரூபா 10,110,624 ஆகக் காணப்பட்டமையினால் ரூபா 745,050 வேறுபாடு சுட்டிக்காட்டப்படுகின்றது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததன் காரணமாக அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 6,465,171,321 | நிலையான சொத்து பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள். |
| வைப்புக்கள் (பிணை, வங்கிச் சான்றிதழ்கள், சிலிண்டர் வைப்புக்கள் மற்றும் ஏனையவை) | 6,711,405 | விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள். |
| இனங்காணப்படாத பொறுப்புக்கள் | 1,653,400 | |
| பதிவழிக்கப்பட வேண்டிய மீதிகள் | 81,769,596 | |
| கடன்பட்டோர் மீதி | 376,215,940 | விரிவான பட்டோலைகள் |
| அமைச்சு நிதியம் | 130,125,038 | விரிவான பட்டோலைகள் மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் மீதிகள் தயாரிக்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள். |
| JICA நிதியம் | 19,992,903 | |
| ADB நிதியம் | 838,173,606 | |
| தீவர திரிசவிய நிதியம் | 12,032,951 | |
| அமைச்சு மானியங்கள் | 53,812,853 | |
| திக்கோவிட்ட மீன்பிடி துறைமுக நிர்மாண நிதியம் | 3,143,094 | |
| திக்கோவிட்ட நிதியம் | 4,644,670 | |
| விஷேட முற்பணங்கள் (2015/12/31 இல் உள்ளவாறு காணப்பட்டவை) | 15,287,022 | |
| மணல் வருமானத்தின் அடிப்படையில் பெறவேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) | 10,434,783 | |
| முற்செலுத்துகைகள் (2016/12/31 இல் உள்ளவாறானது) | 36,721,143 | விரிவான பட்டோலைகள், வயதுப் பகுப்பாய்வு, மீதி உறுதிப்படுத்தல்கள் |
| பெறவேண்டிய பெறுமதி சேர் வரி | 4,753,933 | |
| கடன்கொடுத்தோர் | 9,824,409 | விரிவான பட்டோலைகள் |
| கடன்கொடுத்தோர் – நில்வெல்ல | 200,000 | |
| குத்தகை வாடகை வருமானம் | 36,258,737 | பட்டோலைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு |
| வெஸ்ரேன் கிராண்ட் இன்ஸ்ரிரியூட் இற்கு செலுத்த வேண்டிய முற்பணம் | 76,261,312 | |
| ஏனைய வைப்புக்கள் | 4,122,686 | |
| கடன்கொடுத்தோர் – கம்பஹா மாவட்ட மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | 204,656 | |
| ஏனைய கடன்கொடுத்தோர் | 759,738 | |
| சேதமடைந்த எண்ணெய் தாங்கிகள் | 133,864 | |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சயுரி கப்பல் துறைமுகங்கள் அதிகாரசபையின் கீழ் வருகின்ற ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் அகழ்வு நடவடிக்கைகளிற்காக 2016 திசெம்பர் 16 தொடக்கம் 2017 மார்ச் 09 வரை பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய செயற்பாடுகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்ததனால் அதற்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 24,840,000 தொகை அதிகாரசபையிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வாடகை வருமானமாக காண்பிக்கப்பட்ட ரூபா 75,012,091 பெறுமதியில் 05 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 21,532,211 தொகையான மீதியும் 02 வருடங்களிற்கும் 05 வருடங்களிற்கும் இடையிலான ரூபா 27,543,347 தொகையான மீதியும் மீளாய்வாண்டிற்காக அறவிடப்படாதிருந்த ரூபா 25,936,533 தொகையான மீதியும் காணப்பட்டன.

(இ) கூட்டுத்தாபனத்தினால் வரிசை அமைச்சிற்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்ற பாதுகாப்பு சேவைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பெறப்பட வேண்டிய ரூபா 49,609,330 மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 25,321,132 மீதியும் 02 வருடங்களிற்கும் 05 வருடங்களிற்கும் இடையிலான ரூபா 7,670,999 மீதியும் 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 16,617,199 மீதியும் காணப்பட்டதுடன் இந்த பணத்தை அறவிடும் நடவடிக்கைகள் மந்த நிலையில் காணப்பட்டன.

(ஈ) நங்கூரக் கடன்பட்டோர் மீதியான ரூபா 47,311,629 தொகையில் மோதர மீன்பிடித் துறைமுகத்திற்குரிய தனியார் நிறுவனமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையேயான மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட முறையே ரூபா 14,468,415 தொகை மற்றும் ரூபா 32,843,214 தொகையான கடன் மீதிகள் காணப்பட்டதுடன் இந்த மீதிகளை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொட்பே மீன்பிடித் துறைமுகத்திலுள்ள சங்கென் கப்பலை அகற்றுவது தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து 05 வருட காலத்திற்கு மேலாக பெறப்பட வேண்டிய ரூபா 2,150,000 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு தவறியிருந்தது.

(ஊ) 05 வருட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 10,512,971 தொகையான பொருளாதார சேவைகள் கட்டணத்தை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 39,873 தொகையான சம்பள முற்பணமும் ரூபா 193,159 தொகையான பிரயாணச் செலவின முற்பணமும் மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் 08 துறைமுகங்களிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 5,439,310 தொகையான நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 499,109 கூட்டுமொத்தமான இடர் கடன் மீதியை மீளாய்வாண்டின் போதும் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(vii) ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தின் வழங்கல் முகாமையாளர் பதவியில் உண்மையான நியமனத்தைப் பெற்றிருக்காத உத்தியோகத்தர் 2016 திசெம்பர் 10 இல் ஓய்வுபெற்றிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 27 வரையிலும் அதற்காக உண்மையான நியமனம் மேற்கொள்ளப்படாமல் 02 சந்தர்ப்பங்களில் பதிற்கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவ் உத்தியோகத்தர் ஓய்வுபெறுவதற்கு முன்னரும் அப் பதவிக்காக பதிற்கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் 55 மாத காலப்பகுதியின் போதான அவ் பதிற்கடமைக்காக ரூபா 389,051 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| (i) நிதிப் பிரமாணம் 189 | குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்தின் காசோலைகள் மதிப்பிழந்திருந்ததுடன் அக் காசோலைகளிற்குரிய பணத்தை காசாக மீளப்பெற்றுக்கொள்வதற்கு உரிய நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 1,311,063 பெறுமதிக்காக மீண்டும் காசோலைகள் பெறப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவ்வாறு வழங்கப்பட்ட காசோலைகளில் ரூபா 150,000 மற்றும் ரூபா 180,500 பெறுமதியான 02 காசோலைகள் மீண்டும் மதிப்பிழந்திருந்தன. |
| (ii) நிதிப் பிரமாணம் 454 | பொது 44 படிவத்தின் பிரகாரம் பொருட் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் 22 துறைமுகங்கள் உள்ளடங்கலாக தலைமை அலுவலகத்தின் உப அலுவலங்களிற்காக ரூபா 144,269,604 பெறுமதியான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களுக்காக பொருட் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கு உரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2017 ஒக்தோபர் 25 ஆம் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களிற்கான தொழிசார் படிக் கொடுப்பனவிற்கான ஏற்பாடுகள் சுற்றறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தின் 05 பொறியியலாளர்களிற்கு 2011 திசெம்பர் 12 ஆம் திகதிய 28/2011 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2015 மே 25 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்தால் சுற்றறிக்கைக்கு முரணாக ஆனால் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் போக்குவரத்துப் படிகளை பெற்றுக்கொள்வதற்கு உரித்தில்லாத எம்எம்I–I தொகுதியிலுள்ள 21 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 10,000 விலைவீதப்படியும், எம்எம்I–I தொகுதியின் 03 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 5,000 விலைவீதப்படியும், ஜேஎம்I–I தொகுதியின் 11 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1,500 விலைவீதப்படியும் ஆக ரூபா 2,837,000 கூட்டுமொத்தமான போக்குவரத்துப் படிகள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.8 ஆம் பந்தி | (i) 2017 ஆம் ஆண்டிற்கான நிதி அதிகாரக் கையளிப்பின் எல்லைகளிற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் நிதியாண்டு ஆரம்பித்து 03 மாதங்களும் 11 நாட்களும் கடந்த பின்னர் 2017 ஏப்ரல் 11 இல் பெறப்பட்டிருந்தது.<br>(ii) அதிகாரக் கையளிப்பு எல்லைகளின் கீழ் முகாமைத்துவப் பணிப்பாளரிற்கு ரூபா 75,000 வரையான கொடுப்பனவுகள் மாத்திரமே அங்கீகரிக்கப்பட முடியும் என 2017 ஏப்ரல் 11 இல் நடைபெற்ற 03 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அகழ்வு இயந்திரக் கொள்வனவிற்கான 25 சதவீத முற்பணமாக ரூபா 07 மில்லியன் கொடுப்பனவு முகாமைத்துவப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | பதவிநிலைத் தர உத்தியோகத்தர் ஒருவரிற்கு ஒரு சந்தர்ப்பத்தின் போது வழங்கப்படக்கூடிய உப கட்டுநிதியின் ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது அதன் எல்லையை விஞ்சி 38 சந்தர்ப்பங்களின் போது உப கட்டுநிதிகளாக ரூபா 7,389,950 கூட்டுமொத்தத் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உப கட்டுநிதி எல்லையை விஞ்சியமைக்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (எ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உப பாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அத்தகைய பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவு | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலிற்காக 2017 மார்ச் 15 ஆம் திகதி வழங்கப்பட்ட 33 ஆவது பிற்சேர்க்கையின் பிரகாரம் ரூபா 200,000 இற்கு மேற்பட்ட பெறுமதியான மோட்டார் வாகன திருத்தத்தின் போது பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக உள்ள அமைச்சின் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அத்தகைய அங்கீகாரம் பெறப்படாமல் இரண்டு மோட்டார் வாகனங்களின் திருத்தங்களிற்காக ரூபா 595,296 மற்றும் ரூபா 329,062 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 64,601,645 நட்டமாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 31,396,138 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நட்டம் ரூபா 33,205,507 ஆல் அதிகரித்திருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது. மீண்டெழும் மானியம் ரூபா 1,000,000 ஆலும் செயற்பாட்டு வருமானம் ரூபா 22,384,939 ஆலும் அதிகரித்திருந்த போதிலும் நிர்வாகச் செலவினம் மற்றும் பதவியணிக் கிரயம் என்பன முறையே ரூபா 41,630,998 மற்றும் ரூபா 3,917,210 ஆல் அதிகரித்தமையே மேற்படி நட்டம் அதிகரித்தமைக்குப் பிரதானமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக நட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந் நட்டம் ரூபா 167,049,439 முதல் ரூபா 64,601,645 வரை தொடர்ச்சியாகக் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 403,044,337 ஆக இருந்த கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு நேர்ப் பெறுமதியுடன் தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 865,509,623 ஆகக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கடந்த 04 வருடங்களின் போது கூட்டுத்தாபனத்தின் மொத்த வருமானத்தில் அரச மானியங்களின் பங்களிப்பு 30.36 சதவீதம் முதல் 55.34 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் சுயமாக உழைக்கப்பட்ட வருமானங்களின் பங்களிப்பு 69.64 சதவீதத்திலிருந்து 44.65 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

**3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 வெளி நிறுவனங்கள் மற்றும் நபர்களால் சூரை (Tuna) மீன் மேம்படுத்தல் திட்டத்திற்காக அறவிடப்பட வேண்டிய தொகை, நங்கூரக் கட்டணங்கள், விபத்துக் கோரிக்கைகள் மற்றும் சேவையை இடைநிறுத்துதல் தொடர்பாக ரூபா 3,030,655 கூட்டுமொத்தமான இழப்பீட்டைக் கோரி கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் ஏழு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(ஆ) நிலுவைக் குத்தகை வாடகைகள், 06 எரிபொருள் தாங்கிகளிற்கான முற்பணங்கள், நங்கூரக் கட்டணங்கள் மற்றும் எரிபொருள் கட்டணங்களை அறவீடு செய்தல் தொடர்பாக ரூபா 35,607,695 கூட்டுமொத்தமான இழப்பீட்டைக் கோரி கூட்டுத்தாபனத்தால் 22 வெளி நிறுவனங்களிற்கு எதிராக நீதிமன்றங்களில் 22 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 திட்டமிடல்**

(அ) கூட்டுத்தாபனத்தின் 2016 – 2020 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2017 ஒக்தோபர் 13 இலேயே பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் இலக்குகள் கூட்டுத்தாபனத்தால் அடைந்துகொள்ளப்பட முடியாதிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கூட்டுத்தாபனத்தின் பேரளவு மற்றும் நுண் சுற்றாடலை பகுப்பாய்வு செய்வதன் மூலம் கூட்டுத்தாபனத்தால் உரிமையாக்கப்பட்ட வளங்களை இனங்கண்டு கொள்ளுதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வெளிச் சுற்றாடலை பகுப்பாய்வு செய்தல் என்பன கூட்டிணைந்த திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 – 2015 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டத்தில் செயற்பாட்டு பெறுபேறுகளின் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பொருத்தமான மூலோபாயங்களை இனங்கண்டு கொள்ளும் போது கூட்டுத்தாபனத்தின் தந்திரோபாய ரீதியான வணிக அலகுகளை இனங்கண்டுகொள்வதன் மூலம் செயற்பாட்டு மட்டத்திலுள்ள மூலோபாயங்களை இனங்கண்டு கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் உள்ளகச் சுற்றாடலில் காணப்பட்ட குறைபாடுகளை தவிர்த்து வெற்றிகரமாக வெளிச் சுற்றாடலில் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் ஆபத்துக்களை எதிர்கொள்வதற்காகவும் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் தர்க்க ரீதியான முறையில் தந்திரோபாயங்கள் இனங்காணப்பட்டிருக்காதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது,

(v) மேலும் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட கூட்டுத்தாபனத்தை ஸ்தாபித்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக 2016 – 2020 காலப்பகுதியின் போது அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தந்திரோபாயங்கள் தெளிவாக இனங்காணப்பட்டு அவற்றின் செயலாற்றலை அளவீடு செய்வதற்கான செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்கான நோக்கெல்லை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு மற்றும் காலப்பகுதி, கூட்டுத்தாபனத்தின் 21 துறைமுகங்களின் வருடாந்த வருமானம் மற்றும் அவற்றின் செலவினங்கள் தொடர்பான விரிவான திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கி விபரமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 15 இல் ஒவ்வொரு நடவடிக்கையினதும் பாதீட்டு எல்லைகள் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கை அத் திருத்தங்களிற்கு உட்பட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயலாற்றல் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில்கள் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 1997 மார்ச் 06 திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி என்பவற்றின் பிரகாரம் மீன்பிடி தொழில்செய்வோருக்கு மீன்பிடி படகுகளிற்கான பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு வசதிகளை வழங்குதல் கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக காணப்பட்ட போதிலும் அந் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சிவில் பொறியியல் பிரிவு மற்றும் இயந்திரவியல் பிரிவு என்பவற்றின் நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் செயலாற்றலை பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) காலி மீன்பிடித் துறைமுகத்தின் உள்ளக வீதி வலையமைப்பை புனரமைப்பது தொடர்பாக கேள்வி ஆவணங்கள் மற்றும் பொறியியல் மதிப்பீடுகள் 2017 சனவரி 11 இல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து கூறுவிலைகளை கோருவதற்காக 2017 ஆகஸ்ட் 08 வரை 07 மாத காலப்பகுதி செலவிடப்பட்டிருந்தது. இதனால் 02 மாதங்களான குறுகிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த இவ் உள்ளக வீதிகளின் புனரமைப்பு செயற்திட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்காக 10 மாத காலப்பகுதி கடந்திருந்தது.

(ii) மீன்பிடித் துறைமுகங்களின் உள்ளக நுழைவு வீதிகளை புனரமைப்பதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 12.62 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் காலி மற்றும் பேருவள மீன்பிடித் துறைமுகங்களின் உள்ளக நுழைவு வீதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் முறையே ரூபா 6.4 மில்லியன் மற்றும் ரூபா 2.6 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதிகளில் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் ஏனைய மீன்பிடித் துறைமுகங்களின் உள்ளக நுழைவு வீதிகளிற்கான செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் ரூபா 4 மில்லியன் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(iii) மீன்பிடித் துறைமுகங்களின் எல்லைச் சுவர்களை (boundary walls) நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5.34 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சரியாக எல்லைகளை இனங்காண்பதன் மூலம் எல்லைச் சுவர்களை நிர்மாணிப்பதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காததால் இந் நிர்மாணங்களில் பொதுமக்கள் எதிர்ப்பு அதிகரித்திருந்தன. ஆகையால் இவ் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட 2016 ஏப்ரல் 22 ஆம் திகதி தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை எதிர்பார்க்கப்பட்டவாறு நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தன.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ‘‘றுகுணு புதா’’ மணல் அகழ்வுக் கப்பலின் உலர் வட்டுக்களின் திருத்த நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது ரூபா 26 மில்லியன் நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 23,964,109 தொகைக்கு தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அக் கப்பலின் திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 யூன் 05 இல் திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 30 வரையிலும் மணல் அகழ்வு நடவடிக்கைக்காக கப்பல் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 அம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு அரச தொழில்முயற்சிகளின் பணிப்பாளர் சபையானது அவற்றின் வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்து மேற்பார்வை செய்வதற்காக சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவொன்றை நியமனம் செய்ய வேண்டிய போதிலும் பணிப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தின் வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்து மேற்பார்வை செய்வதற்காக சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவொன்றை நியமனம் செய்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பலாங்கொடை துறைமுகத்தின் மணலை அழ்ந்து விற்பனை செய்தல் 2016 ஆகஸ்ட் 18 இல் வெளித் தரப்பினர் ஒருவரிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூட்டுத்தாபனத்தில் போதியளவு அகழ்வு இயந்திரங்கள் காணப்படாமை, ஏற்கனவேயுள்ள அகழ்வு இயந்திரங்கள் செயற்திறனற்று விளைவற்றிருத்தல் காரணமாக உயர் கிரயம் போன்ற காரணங்கள் வெளித் தரப்பினரிற்கு குறித்த வேலை கையளிக்கப்பட்டமைக்கான காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தில் செயற்பாட்டு நிலையில் 04 அகழ்வு இயந்திரங்கள் காணப்பட்டன.

(ii) மணல் அகழ்வு தொடர்பான இயந்திரம் வெளித் தரப்பினரிற்குச் சொந்தமாக இருக்க வேண்டுமென கூறுவிலை அறிவித்தலில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒப்பந்ததாரரின் இயந்திரக் கிடைப்பனவுத் தன்மை தொடர்பாக அதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. இதனால் மணலை அகற்றுவதற்காக வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனத்திடமிருந்து வேலை மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 11,000

விலைவீதத்தில் குத்தகை அடிப்படையில் 2016 செப்தெம்பர் 24 இல் அகழ்வு இயந்திரம் ஒன்றை கூட்டுத்தாபனம் பெற்றிருந்ததுடன் அவ் அகழ்வு இயந்திரம் நியாயமற்ற முறையில் வெளித் தரப்பினரிற்கு மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 3,500 விலைவீதத்தில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 4,009,500 நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iii) வெளித் தரப்பினரிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட அவ் அகழ்வு இயந்திரம் ரூபா 28 மில்லியன் செலவிட்டு 2017 பெப்ரவரி 01 இல் வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனத்திடமிருந்து மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அம்பலாங்கொடை மீன்பிடி துறைமுகத்தின் மணலை அகற்றுவதற்காக 2017 ஒக்தோபர் 03 வரை அவ் வெளித்தரப்பினரிற்கு இவ் இயந்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கொள்வனவு செய்யப்பட்ட அகழ்வு இயந்திரம் வெளித் தரப்பினரின் தேவைப்பாட்டிற்காக தனியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்கள் நிறுவனத்தின் தலைவரால் நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் மணலை அகழ்ந்து விற்பனை செய்வதற்கான கேள்வியிலும் ரூபா 28 மில்லியன் பெறுமதியான அகழ்வு இயந்திரத்தை கொள்வனவு செய்வதிலும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக முகாமைத்துவப் பணிப்பாளரால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(iv) மணல் அகழ்வு தொடர்பாக கூட்டுத்தாபனத்தால் வெளித் தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 03 ஆம் உட்பிரிவின் பிரகாரம் 7,268 கியூப் அளவான மணல் 2016 ஒக்தோபர் 03 தொடக்கம் பன்னிரண்டு மாத காலப்பகுதியினுள் அகழ்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 4,992.5 கியூப் மணல் மாத்திரமே உரிய காலப்பகுதியின் போது அகற்றப்பட்டிருந்ததனால் கியூப் ஒன்று ரூபா 615 விலைவீதத்தில் விற்பனை செய்வதன் மூலம் அகற்றப்படாத 2,275.5 கியூப் மணல் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட வருமான இழப்பு ரூபா 1,399,432 தொகையாக காணப்பட்டது. மேலும் மீன்பிடி சமுதாயத்தின் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியவாறு மீன்பிடித் துறைமுகத்தைப் பேணும் வகையில் மணல் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பன்னிரண்டு மாத காலப்பகுதியினுள் அவ்வாறு அகழப்பட்ட மணலை அகற்றுதல் என்பன உடன்படிக்கையின் உட்பிரிவு 01 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காதமை பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. ஆகையால் மீன்பிடிப் படகுகள் துறைமுகத்தின் கரையோர தாழ்நிலப் பகுதியை அடைய முடியாதிருந்தன.

(v) மீன்பிடி சமுதாயங்களின் தேவைப்பாடுகளிற்கு இணங்க அகழ்வு நடடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக குறிப்பிட்ட வெளித் தரப்பினரின் தேவைப்பாட்டின் பிரகாரம் சிறிய தாழ்நிலப் பகுதிகளில் மாத்திரம் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்தமை பௌதீக பரீட்சிப்பின் போது மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. துறைமுகம் ஆரம்பிக்கப்பபட்ட பின்னர் ஏழு வருடங்கள் கடந்திருந்தது வரை இத் துறைமுகத்தில் தொடர்ச்சியாக சேகரிக்கப்படுகின்ற மணலை அகற்றுவதற்காக ஒழுங்கான மற்றும் நீண்ட கால முறையான நடைமுறையொன்றை தயாரித்து அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு கட்டுப்பாட்டு அதிகாரி கணக்காய்வுத் திகதியான 2017 ஒக்தோபர் 17 வரையிலும் தவறியிருந்தார்.

(vi) 2017 யூலை 18 இல் நடைபெற்ற மீனவர் குழுக் கூட்டத்தில் மணலை அகற்றும் நடவடிக்கை தொடர்பாகவும் மணலுடன் கப்பலின் அடிப்பகுதி மோதுதல் தொடர்பாகவும் துறைமுக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னரும் அகழ்வு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்குப் போதியளவு நடவடிக்கைகளை கட்டுப்பாட்டு அதிகாரி எடுத்திருக்கவில்லை. இதனால் மீனவர்கள் எரிபொருள், தண்ணீர் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காகவும் காணிக்கு அவர்களின் உழைப்பை திருப்பிக் கொண்டு வருவதற்காகவும் துறைமுகத்தின் கரையோர தாழ்நிலப் பகுதிகளை அடைய முடியாதிருந்தது. மேலும் மேற்குறிப்பிடப்பட்டவாறான பல்வேறு சிக்கல்களிற்கு மீனவர்கள் முகங்கொடுக்கின்றமை 2017 ஒக்தோபர் 17 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) தலைமை அலுவலகத்திற்கும் மீன்பிடித் துறைமுகங்களிற்கும் இடையே தரவுகளை பரிமாற்றுவதற்காக மென்பொருள் பொதியொன்றை நிறுவிப் பேணுவதற்காக ரூபா 950,000 ஒப்பந்தப் பெறுமதியில் 2015 நவம்பர் 17 இல் தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேலும் 2016 ஏப்ரல் 27 இல் ரூபா 425,000 மற்றும் 2016 திசெம்பர் 01 இல் ரூபா 385,000 ஆக ரூபா 810,000 கூட்டுமொத்தத் தொகை பின்னர் இனங்காணப்பட்ட தேவைப்பாடுகளிற்காக மென்பொருள் பொதியை தரமுயர்த்துவதற்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ் மென்பொருள் பொதியின் குறைபாடுகள் காரணமாக தரவுகளை நாளதுவரையாக்குவதில் பிரச்சனைகள் காணப்பட்டதென தெரிவித்து மீன்பிடித் துறைமுகங்களின் முகாமையாளர்கள் தலைமை அலுவலகத்திற்கு கடிதங்களை அனுப்பியிருந்த போதிலும் உரிய உடன்படிக்கையின் பிரகாரம் மென்பொருள் பொதியை பேணுவதற்காகவும் முறைமையை சரிசெய்வதற்காகவும் கூட்டுத்தாபனம் போதியளவு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. மேலும் இறுதி நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக மென்பொருள் பொதியினூடாக மீன்பிடித் துறைமுகங்களின் நிதித் தகவல்கள் மற்றும் வருமானச் செலவினப் பொழிப்புக்கள் என்பன பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 16 மீன்பிடித் துறைமுகங்களில் ரூபா 4,063,780 கூட்டுமொத்தமான எரிபொருள் பற்றாக்குறையும் 09 மீன்பிடித் துறைமுகங்களில் ரூபா 1,055,824 கூட்டுமொத்தமான எரிபொருள் மிகையும் காணப்பட்டன. எவ்வாறாயினும் எரிபொருள் இருப்பில் காணப்படும் அத்தகைய வழமையற்ற பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளிற்கான காரணங்களை இனங்கண்டு கொள்வதன் மூலம் அத்தகைய நிலைமை ஒன்றை தவிர்ப்பதற்காக முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஈ) தொடம்துவ மீன்பிடித் துறைமுகத்தின் மீன்பிடிப் படகு இயந்திரங்களை களஞ்சியப்படுத்துவதற்காக மீனவர்களிற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 2,848,128 தொகை செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அக் கட்டிடத்தின் அறைகள் பாகப் பிரிவினை செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் எதிர்பாக்கப்பட்ட நோக்கத்திற்காக அதனை பயன்படுத்த முடியாதிருந்தது. ஆகையால் அக் கட்டிடம் ரூபா 2,226,895 தொகை செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டில் 16 அறைகளாக பாகப் பிரிவினை செய்யப்பட்டு 2017 ஒக்தோபர் 19 இல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 20 வரையிலும் இக் கட்டிடத்தின் எந்தவொரு அறையும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) (i) தொடம்துவ மீன்பிடித் துறைமுகத்தின் குளிர் அறையிலுள்ள ஐஸ் உடைக்கும் இயந்திரம் (Ice breaker machine) திருத்த நடவடிக்கைகளிற்காக 2012 மே 21 இல் தலைமை அலுவலகத்தின் இயந்திரவியல் களஞ்சியத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான

2018 மார்ச் 20 வரை கிட்டத்தட்ட 06 ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த போதிலும் அவ் இயந்திரம் திருத்தம் செய்யப்பட்டு துறைமுகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) குளிர் அறையின் கொம்பிரசர் (Compressor) ஒரு மாத காலப்பகுதிக்கு மேலாக விளைவற்றிருந்ததுடன் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. துறைமுகத்தின் மாதாந்த வருமானத்தில் அதிகளவான வருமானம் ஐஸ் விற்பனையிலிருந்து பெறப்படுகின்றது. துறைமுகம் நட்டத்தில் இயங்குகின்ற சந்தர்ப்பத்தில் நட்டத்தை மேலும் அதிகரிப்பதற்கு குளிர் அறை விளைவற்றிருக்கின்றமை பங்களிப்புச் செய்கின்றமை அவதானிக்கப்பட்டது,

(ஊ) சுதுவெல்ல மீன்பிடித் துறைமுகத்தால் மீளாய்வாண்டின் போது 83 சந்தர்ப்பங்களில் 119,120 லீற்றர் மற்றும் 2018 மே 09 வரை 19 சந்தர்ப்பங்களில் 822,449 லீற்றர் அளவிலான மண்ணெண்ணை மீனவர்களாக பதிவு செய்யப்பட்டிருக்காத நபர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2018 மே 10 இல் அவ் மீன்பிடித் துறைமுகத்தால் 2,455 லீற்றர் மண்ணெண்ணையை மண்ணெண்ணை விற்பனை செய்யும் தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு துறைமுக முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருந்தது. 2018 மே 10 முதல் ரூபா 57 ஆல் மண்ணெண்ணை லீற்றரொன்றின் விலை அதிகரிக்கும் தகவலை துறைமுக முகாமைத்துவம் அறிந்திருந்த போதிலும் அவ்வாறு வெளித் தரப்பினர்களிற்கு பிற்பகல் 5.00 மணியின் பின்னர் மீன்பிடித் துறைமுகத்தின் தொழிலாளர் ஒருவரைப் பயன்படுத்தி 2,455 லீற்றர் அளவான மண்ணெண்ணை வழங்கப்பட்டிருந்தது. இதனால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 139,935 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(எ) 2017 ஆம் ஆண்டின் போது 83 சந்தர்ப்பங்களில் 119,120 லீற்றர் மண்ணெண்ணை மற்றும் 2018 மே 09 வரை 19 சந்தர்ப்பங்களில் 22,449 லீற்றர் மண்ணெண்ணை மீனவர்களின் போலியான பதிவேடொன்றை தயாரித்து சுதுவெல்ல மீன்பிடித் துறைமுகத்தால் வழங்கப்பட்டிருந்தது.

(ஏ) புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தின் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கும் போது கேள்வியின் 05 ஆம் நிபந்தனையின் பிரகாரம் ரூபா 96,599 ஆகக்குறைந்த மாதாந்த குத்தகை தொகைக்கு 2017 மார்ச் 16 தொடக்கம் ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவாளரால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின் பிரகாரம் அதே கேள்விக் காலப்பகுதியான 2017 ஆகஸ்ட் 21 தொடக்கம் 2018 ஆகஸ்ட் 20 வரை மாதாந்தக் குத்தகை ரூபா 68,000 ஆக உடன்படிக்கையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இவ் மாதாந்த குத்தகையானது கேள்வி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதாந்த குத்தகையை விட ரூபா 28,599 ஆல் குறைவாக இருந்ததனால் கூட்டுத்தாபனத்திற்கு மாதாந்தம் ரூபா 28,599 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஐ) தங்காலை மீன்பிடி துறைமுகத்தால் துறைமுகத்திலுள்ள மீன்பிடிப் படகுகளிற்கு எரிபொருள் வழங்குவதற்காக பேணப்பட்ட நிரப்பு நிலையத்தின் டீசல் இருப்பு தொடர்பாக 2018 மார்ச் 05 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது விற்பனை செய்வதற்கு முன்னர் எரிபொருள் இருப்பின் அளவு 16,558 லீற்றர்களாக காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறான இருப்புப் புத்தகங்களின் பிரகாரம் எரிபொருள் இருப்பு 21,020 லீற்றர்களாக இருந்தது. இதனால் 4,462 லீற்றர் எரிபொருள் பற்றாக்குறையாகவும் அதன் பெறுமதி ரூபா 423,890 ஆகவும் இருந்தது.

(ஒ) காலி மீன்பிடித் துறைமுக வளவில் அமைந்துள்ள குமாரசிங்ஹ கட்டிடத்தில் 210 சதுர அடி பரப்பளவுடைய அறை ஒன்றில் காலி மாவட்டத்தின் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கத்தால் அலுவலகம் பேணப்பட்டிருந்ததுடன் அதற்காக எந்தவொரு கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஓ) தொடம்துவ, சுதுவெல்ல, புராணவெல்ல மற்றும் நில்வெல்ல போன்ற துறைமுகங்களின் பாதுகாப்பகங்களில் வைப்புச் செய்வதற்கான காசு ஒதுக்கீட்டு எல்லைகள் முறையே ரூபா 250,000, ரூபா 1,200,000, ரூபா 500,000 மற்றும் ரூபா 1,500,000 தொகைகளாக காணப்படுவதுடன் அவ் எல்லைகளை விஞ்சி பாதுகாப்பகங்களில் காசு காணப்பட்டது. மேலும் தொடம்துவ மீன்பிடித் துறைமுகத்தில் 08 சந்தர்ப்பங்களில் ரூபா 299,013 தொடக்கம் ரூபா 399,796 வரையான வீச்சிலும் சுதுவெல்ல மீன்பிடித் துறைமுகத்தில் இரண்டு சந்தர்ப்பங்களில் எல்லைகளை விஞ்சியும் பாதுகாப்பகங்களில் காசு காணப்பட்டது.

(ஔ) குடாவெல்ல மீன்பிடித் துறைமுகத்தின் வங்கிக் கணக்கு தொடர்பாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை பரீட்சித்த போது 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் கணக்கில் ரூபா 514,340 நிச்சயமற்ற காசு மீதியொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் அது தொடர்பாக பரீட்சித்து அம் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(க) 2017 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் 2018 ஒக்தோபர் 03 வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) கூட்டுத்தானத்தால் மாதாந்த குத்தகையை தீர்மானிப்பதற்காக அரசாங்க மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ளாமல் அம்பலாங்கொடை மீன்பிடித் துறைமுகத்தின் 40 பேர்ச்கள் பரப்பளவான காணி 2011 திசெம்பர் 27 இல் ரூபா 100,000 மாதாந்த குத்தகைக்கு ஐஸ் தொழிற்சாலையை பேணுவதற்காக 20 ஆண்டு காலப்பகுதிக்கும் 04 பேர்ச்கள் பரப்பளவான காணி 2014 யூன் 25 இல் ரூபா 10,000 மாதாந்த குத்தகைக்கு மசகு எண்ணெய்க்கான விற்பனை நிலையமொன்றை பேணுவதற்காக 09 ஆண்டுகளும் 05 மாதங்களுமான காலப்பகுதிக்கும் தனியார் கம்பனியொன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(கி) முற்செலுத்துகை பதிவேட்டின் பிரகாரம் 01 ஆண்டை விடக் குறைந்த, 01 மற்றும் 05 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட, 05 மற்றும் 10 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட மற்றும் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட முற்செலுத்துகை மீதிகள் முறையே ரூபா 620,880, ரூபா 11,551,997, ரூபா 6,598,719 மற்றும் ரூபா 17,893,981 தொகைகளானதுடன் முகாமைத்துவம் அவ் முற்செலுத்துகைகளை தீர்ப்பனவு செய்வதற்கு போதியளவு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(கீ) ஹிக்கடுவ மீன்பிடித் துறைமுகத்தில் படகோட்டத்தின் போது 2016 நவம்பர் 06 இல் சயுரி படகு விபத்திற்குள்ளானதுடன் அப் படகை காப்புறுதி செய்யாததன் காரணமாக விபத்து ஏற்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களிற்காக ரூபா 5,800,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(கு) மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில் 21 துறைமுகங்களே தற்போது செயற்பாட்டிலுள்ளன. அவற்றில் 05 துறைமுகங்களிற்குச் சொந்தமான காணிகளின் உரிமைத்துவம் மாத்திரமே கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மிகுதியாகவுள்ள துறைமுகங்களின் உரிமைத்துவத்தை கையளித்தல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் மொத்த செயற்பாட்டு இலாபத்தில் 73 சதவீதத்தை உழைத்திருந்த மோதர மீன்பிடித் துறைமுகம் 25 ஆண்டு காலப்பகுதிக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் மதிப்பீட்டாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 125,000 ஆன மாதாந்த வாடகையில் 2014 ஒக்தோபர் 30 இலிருந்து தனியார் நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) கூட்டுத்தாபனத்திற்கும் குத்தகைக்கு பெற்றவரிற்கும் இடையே 2015 யூன் 10 இல் கைச்சாத்திடப்பட்ட மேலதிக உடன்படிக்கையின் உட்பிரிவு 03 இன் பிரகாரம் குத்தகைக்குப் பெற்றவரிடமிருந்து அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகையை அறவீடு செய்வதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. மேலும் 2016 பெப்ரவரி 25 இல் பெறப்பட்ட அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மோதர மீன்பிடித் துறைமுகத்தின் 1.421 ஹெக்டெயர் பரப்பளவான காணியின் வாடகை 7695 ஆம் இலக்க திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,700,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அரசாங்க மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டின் இறுதி வரை கூட்டுத்தாபனத்திற்கான ரூபா 42,756,000 குத்தகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(iii) மோதர மீன்பிடித் துறைமுகத்திற்கான அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கை 7695 ஆம் இலக்க திட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்ட காணியின் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் அவ் அறிக்கை அதே போல் துறைமுகத்தின் தாழ்நிலப் பகுதிகளை உள்ளடக்கி அதனாலேயே துறைமுகம் முழுவதற்குமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் துறைமுகத்தின் தாழ்நிலப் பகுதிகளை உள்ளடக்கி அரசாங்க மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) ரூபா 224 மில்லியன் செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவச் செயற்திட்டம் என்பவற்றின் கடன் உதவியில் நிர்மாணிக்கப்பட்டு கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட சிலாபம் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் துறைமுகத்தால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பிரதான நோக்கமாகவுள்ள மீனவர்களிற்கான நிவாரண ஏற்பாடு 2017 மே வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை துறைமுகத்தின் செயற்பாடுகளிலிருந்து ஏற்பட்ட நட்டம் ரூபா 65,371,627 ஆக இருந்ததால் இத் துறைமுகத்திற்காகச் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவு மற்றும் அதன் மீதான வட்டி என்பன அரசாங்கத்திற்கான செலவின சுமையொன்றாக இருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற 21 மீனபிடித் துறைமுகங்களில் 15 துறைமுகங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 150,964,219 செயற்பாட்டு நட்டங்களை அடைந்திருந்ததுடன் அவ் 11 துறைமுகங்கள் முன்னைய ஆண்டிலும் நட்டங்களை அடைந்திருந்தன. தங்காலை, அம்பாந்தோட்டை, சுதுவெல்ல, பேருவளை மற்றும் காலி மீன்பிடித் துறைமுகங்களின் செயற்பாட்டு நட்டங்கள் முறையே 10 சதவீதம், 22 சதவீதம், 17.5 சதவீதம், 215 சதவீதம் மற்றும் 231 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. நட்டத்தில் இயங்குகின்ற துறைமுகங்களின் நட்டங்களிற்கான காரணங்களை ஆய்வு செய்வதற்கும் அவற்றை இலாபத்தன்மையான துறைமுகங்களாக மாற்றுவதற்கும் அல்லது நட்டங்களை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலாபம் குறைகின்ற துறைமுகங்களின் இலாபத்தை அதிகரிப்பதற்கும் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) சபையின் அங்கீகாரத்துடன் புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தின் 04 பதிவு செய்யப்பட்ட கப்பல்களிற்காக பாரந்தூக்கி கட்டணங்களாக ஒவ்வொன்றிற்கும் ரூபா 47,000 தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 23,500 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இதனால் கூட்டுத்தாபனத்திற்கு பாரந்தூக்கி ஒன்றிற்கு ரூபா 23,500 படி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(உ) புராணவெல்ல மீன்பிடித் துறைமுகத்தால் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், மீன்பிடி பரிசோதகர்களின் அலுவலகம் மற்றும் லங்கா ஐஸ் கம்பனி என்பவற்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட கட்டிடங்களிலிருந்து 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்காகவும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையும் நிலுவையாகவுள்ள குத்தகை பணம் மற்றும் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் முறையாக அறவிடப்பட்டிருக்காததன் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 02 வரை நிலுவைப் பணமாக ரூபா 431,728 கூட்டுமொத்தத் தொகை காணப்பட்டது.

## 4.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாணந்துறை துறைமுகத்தில் மணலை அகற்றுவதற்காக அங்கீகாரமின்றி 2014 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் பிணையொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 20,000,000 தொகையான முற்பணம் அக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 10 ஆம் திகதிய மேலதிக உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம், அகழ்ந்தெடுக்கப்படும் மணல் விற்பனை செய்யப்பட்டு பெறப்படுகின்ற வருமானத்திற்கெதிராக அவ் முற்பணத்தை தனியார் கம்பனி ஈடுசெய்ய வேண்டிய போதிலும் அவ் முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொட்பே மீன்பிடித் துறைமுகத்திற்குச் சொந்தமான 100 தொண் தியத் மக கப்பல், ஊழியர் விடுதி மற்றும் தொழிற்சாலை 06 மாதங்களிற்குள் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்காக தனியார் தரப்பினரிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 29 ஆம் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் 06 மாதங்களிற்குள் அவர்களால் உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் குத்தகைக்கு வழங்கப்பட்ட ஆரம்ப நோக்கம் 13 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக விளைவற்றிருந்த தியத மக ஐ மேம்படுத்துவது ஆக காணப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 30 இல் உள்ளவாறு 4½ ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த போதிலும் குத்தகைக்கு வழங்கப்பட்ட ஆரம்ப நோக்கம் அடையப்பட முடியாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை குத்தகைக்குப் பெற்றவரிடமிருந்து (கொள்வனவாளர்) ரூபா 1,690,500 நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.5 நிதியத்தை குறைவாகப் பயன்படுத்துதல்

06 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து ரூபா 224,749 பெறுமதியான 06 வங்கிக் கணக்குகளின் மீதிகள் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படாமல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன.

## 4.6 விளைவற்ற சொத்துக்கள்

புராணவெல்ல, சுதுவெல்ல, நில்வெல்ல, தங்காலை, காலி மற்றும் குடாவெல்ல போன்ற மீன்பிடித் துறைமுகங்களிற்குச் சொந்தமான 03 சுற்றுலா பங்களாக்கள், 02 குளிர் அறைகள், 03 ஐஸ் பொறிகள், 04 கட்டிட கடைகள், வேலைத்தள தொழிற்சாலையொன்று மற்றும் உத்தியோகபூர்வ இல்லமொன்று, 10 இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மற்றும் 05 மோட்டார் வாகனங்கள் மற்றும் கப்பல்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன.

## 4.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் வளங்கள்

மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சிற்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கும் கூட்டுத்தாபனத்தின் 23 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 12,815,813 சம்பளங்கள் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப் பணத்தை உரிய நிறுவனங்களிலிருந்து மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் பதவியணியினர் 1,015 ஆக காணப்பட்ட போதிலும் அத் திகதியிலுள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 1,176 ஆக காணப்பட்டது. பதவியணியிலுள்ள வெற்றிடங்கள் மற்றும் மிகைகள் முறையே 313 மற்றும் 453 ஆக காணப்பட்டதுடன் அவ் மிகைப் பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத 25 பதவிகளிற்கான 404 உத்தியோகத்தர்களை கொண்டிருந்தது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மீண்டும் சேவைக்கு எடுக்கப்படாதமையை திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 2012 சனவரி 04 ஆம் திகதி முதல் மனித வளங்கள் முகாமையாளர் பதவிக்காக அரசாங்க நிறுவனமொன்றால் மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றின் பெறுபேற்றின் அடிப்படையில் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் மீளவும் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவின் பிரகாரம் சம்பளத் திருத்தத்திற்காக திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் நிதி முகாமையாளர் பதவிக்கான 34 சம்பள ஏற்றங்களும் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள பதவியொன்றில் உள்ள பிரத்தியேக உதவியாளர் பதவிக்காக தகுதிகாண் காலம் பூர்த்தியடைவதற்கு முன்னர் 15 சம்பள ஏற்றங்களும் ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகள் பிழையான சம்பள படிநிலைகளில் வைக்கப்பட்டிருந்ததுடன் அதேபோல் இரண்டு சட்ட உத்தியோகத்தர்களிற்கு மாதமொன்றிற்கு ரூபா 10,000 படி விசேட படிகளும் செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) 2010 ஆகஸ்ட் 02 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் செயற்திட்ட இணைப்பாளர் பதவிக்கு ஒரு வருட காலப்பகுதிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்களிற்கு முரணாக மாதமொன்றிற்குள் பிரதி முகாமையாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டிருந்தார். அதன் பிரகாரம், ஒப்பந்தக் காலத்தில் அவரின் வினைத்திறன் மற்றும் பொருத்தத்தன்மை தொடர்பாக பரிசோதனைக்குட்படுத்தப்படாமல் 2012 சனவரி 06 ஆந் திகதி சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தார்.

(உ) கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 25 இல் உள்ளவாறு கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தின் மொத்தப் பதவியணியினர் 55 ஆகக் காணப்பட்டது. மீன்பிடித் துறைமுகத்தில் பாலம் தராசு, படகைக் கண்காணிக்கும் திமிங்கிலம் மற்றும் மீன்பிடித் துறைமுகத்திலுள்ள பாரந்தூக்கி என்பன காணப்படாத போதிலும் பாலம் தராசு செயற்படுத்துநர் ஒருவர், கொக்ஸ்வெயின் மற்றும் உதவியாளர் ஆக இரு உத்தியோகத்தர்கள் மற்றும் உதவிப் பாரந்தூக்கி செயற்படுத்துநர் ஆகியோர் இப் பதவியணிக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் செயற்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பாக இலக்கு கட்டங்கள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 37 நாட்கள் தாமதித்து 2018 ஏப்ரல் 06 ஆம் திகதியிலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படும் போது நிறுவனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் போன்ற நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாக கவனம் செலுத்தி அவ் அனைத்துப் பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் வரையறுக்கப்பட்ட வளங்களை ஈடுபடுத்தி கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தால் செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும் நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக செயற்பாடுகளிற்கிடையேயான ஆபத்துக்களை இனங்கண்டு அவ் ஆபத்துக்களிலிருந்து ஏற்படும் பாதகமான தாக்கங்களையும் அப் பாதகமான தாக்கங்களை தவிர்ப்பதற்கு காணப்படுகின்ற கட்டப்பாட்டுப் பொறிமுறைகளின் பலவீனங்களையும் ஆய்வு செய்து மிகவும் ஆபத்துடைய படிமுறைகளை பரிசோதனை செய்து அதிக கவனம் செலுத்தி அதன் பிரகாரம் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு உயர் ஆபத்துப் பரப்புக்களின் பிரகாரம் நிறையளிக்கப்படாமல் 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு திட்டத்தில் நிர்மாண நடவடிக்கைகள், பெறுகை, நிலையான சொத்துக்கள் பதிவேடு, ஊழியர் பணிக்கொடை மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்களை பரீட்சித்தல் ஆகிய 05 பரப்புக்களுக்குரிய கணக்காய்வு நடவடிக்கைகள் ஆண்டு முழுவதும் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததென சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2017 நவம்பர் 20 வரையிலும் அப் பரப்புக்கள் தொடர்பாக அத்தகைய பரீட்சிப்பு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டொன்றிற்காக தயாரிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் அவை சமர்ப்பிக்கப்பட வேண்டிய இலக்கு திகதிகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் இரண்டு ஆரம்ப மற்றும் பொழிப்பு அறிக்கைகள் மற்றும் காலாண்டு ரீதியான அறிக்கைகள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுத்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும். 18 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மிளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 10 அறிக்கைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான நோக்கமாக திணைக்களத்தின் நிதிச் செயற்பாடுகள் தொடர்பாக காணப்படுகின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக்கு பங்களித்து அச்செயற்பாடுகளின் தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுத்தல் மற்றும் வெளியிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற உள்ளக பரிசோதனைகளை முறையானதாகவும் போதியளவாகவும் தொடர்ச்சியாக ஆய்வு செய்தல் மற்றும் சுதந்திரமான மதிப்பீடொன்றைப் பேணிச் செல்லல் என்பன காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த பிரிவின் மூலம் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் சொத்துக்களை அறிக்கையிடல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை இந்த நிறுவனங்களின் சொத்துக்கள் தொடர்பாக முறையான அறிக்கையொன்று கணக்காய்வுத் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

### 6.3.1 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய போட்டிக் கேள்வி முறையின் கீழ் சிவில் பொறியியல் பிரிவிற்காக நீர்ப்பரப்பிற்குரிய அளவை மென்பொருள் மற்றும் அளவை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1.1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பிரிவினால் 2017 யூலை மாதம் வரை அதில் ரூபா 214,257 தொகை அளவை நடவடிக்கைகளிற்காக களங்களில் செலவிடப்பட்டிருந்தது.

(ii) ஹிக்கடுவ மற்றும் கிரிந்த மீன்பிடித் துறைமுகங்களில் அகழ்வுக் கப்பல்களிற்கான துணைக் கருவிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 06 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் ஒதுக்கீட்டில் தேசிய போட்டி மற்றும் சந்தைவிலை கேள்வி கோரல் முறைகளை பின்பற்றி அப் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அவ் முறையை பின்பற்றாமல் துறைமுக முகாமையாளரால் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) கூட்டுத்தாபனத்தால் 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கணக்காய்வுத் திகதியான 2017 நவம்பர் 08 வரையிலும் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்தின் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் பெறுகையின் போது ஏற்பட்ட தாமதங்களை இனங்கண்டு அதற்கு அடிப்படையான காரணங்களை தெளிவுபடுத்துதல் மற்றும் அதற்கு தேவையான திருத்த நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் திறைசேரியால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளிற்கான திட்டங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 173.4 மில்லியன் நிதியேற்பாடுகளிற்கான திட்டங்கள் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அத் தொகையில் ரூபா 110,712,612 தொகை திட்டமொன்றில்லாமல் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீன்பிடித் துறைமுகங்களிற்காக 2012, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது 09 பீகன் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்ட பெறுகை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பீகன் விக்குகளை கெள்வனவு செய்த போது, தாமதமொன்றுடன் கேள்வி திறத்தல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு நிராகரிக்கப்படாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் தாமதமொன்றுடன் அவ்வாறு பெறப்பட்ட மேற்குறிப்பிட்ட கேள்வி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 344,000 பெறுமதியான பெறுகை நடவடிக்கை அதே வழங்குநரிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) கேள்வி திறத்தல் கூட்ட அறிக்கை, கேள்விதாரரின் பிரதிநிதிகளினதும் கேள்வி திறத்தல் குழுவின் அங்கத்தவர்களினதும் கையொப்பங்கள், ஒவ்வொரு கேள்வியும் அவதானிக்கப்பட்டிருந்தமை மற்றும் நிதித் தகவல்கள் போன்றன தொடர்பான மாதிரிப் படிவங்கள் எதுவும் கூட்டுத்தாபனத்தின் கேள்வி திறத்தல் குழுவால் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இரவு நேரங்களில் துறைமுகத்தின் கரையோர தாழ்நிலப் பகுதிகளை அடையும் மீன்பிடிப் படகுகளிற்காக பீகன் விளக்குகள் தேவையாக உள்ள போதிலும் 07 மீன்பிடித் துறைமுகங்களில் பிகன் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தால் தேசிய போட்டிக் கேள்வி முறையின் கீழ் கொட்பே, திக்கோவிட்ட, பேருவளை, காலி, மிரிஸ்ஸ, புராணவெல்ல, குடாவெல்ல மற்றும் அம்பலாங்கொடையிலுள்ள மீன்பிடித் துறைமுகங்களிற்காக 08 எரிபொருள் பம்ப்களை கொள்வனவு செய்யும் பெறுகையின் போது வழங்குநரை தெரிவு செய்வதில் ஆரம்ப தொழில்நுட்ப குறிப்புரையான நிமிடமொன்றிற்கு 150 லீற்றர்கள்

வழங்கப்படுவதை பூர்த்தி செய்திருந்த விநியோகஸ்தரிற்கு ரூபா 19,121,000 பெறுமதிக்கு எரிபொருள் பம்ப்களை வழங்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வழங்கப்பட்ட எரிபொருள் பம்ப்களின் இயலளவு நிமிடம் ஒன்றிற்கு 138 லீற்றர்களாக இருந்தது. இதனால் கூட்டுத்தாபனத்தின் தேவைப்பாட்டிற்குப் பொருத்தமில்லாத எரிபொருள் பம்ப்கள் கொள்வனவு செய்யப்பட்டு மீன்பிடித் துறைமுகங்களில் நிறுவப்பட்டிருந்ததுடன் அவ் எரிபொருள் பம்ப்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தமை பௌதீக கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) (i) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணப் பிணையொன்றின் மீது ஒப்பந்தப் பெறுமதியில் ஆகக் கூடியது 20 சதவீத முற்பணத் தொகை மாத்திரமே பெறப்பட முடியும். எவ்வாறாயினும் அதற்கு முரணாக காலி, மிரிஸ்ஸ, குடாவெல்ல மற்றும் பேருவளை மீன்பிடித் துறைமுகங்களிற்கான 04 பாலம் தராசுகளை கொள்வனவு செய்வதற்காக முற்பணப் பிணை பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை ஒப்பந்தப் பெறுமதியில் 66 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,950,000 முற்பணம் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 23 இல் பொருட்களை வழங்கும் ஒப்பந்தத்தை வழங்கிய பின்னர் கணக்காய்வுத் திகதியான 2018 யூன் மாதம் வரை 17 மாதங்கள் கடந்திருந்த போதிலும் ஒப்பந்ததாரரால் எந்தவொரு துறைமுகத்திலும் பாலம் தராசுகள் நிறுவப்பட்டிருக்கவில்லை. இதனால் செலுத்தப்பட்ட முற்பணங்கள் பயனற்ற செலவினமாகியிருந்தது.

### 6.3.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

அமைச்சரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தை திருத்தம் செய்யும் ஒப்பந்தத்தின் பொறியியல் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 9,466,475 ஆக காணப்பட்ட போதிலும் திருத்த நடவடிக்கைகள் பூர்த்தியடைந்த பின்னர் உறுதியப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 12,239,356 தொகையாகும். அதற்கிணங்க பொறியியல் மதிப்பீட்டை விஞ்சிய ரூபா 2,772,881 அல்லது 29 சதவீதக் கொடுப்பனவிற்காக பெறுகைக் கைநூலின் 8.13.4 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் பாதீட்டுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை, பாதீடு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று, பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவினக் கூற்று என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.5 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்கான ஆண்டறிக்கைகள் 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை.

## 6.6 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீர்கொழும்பு கடல்நீர் ஏரி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1,225,000 கிரயத்தில் 1,500 ரீசேட்கள் மற்றும் 2,000 தொப்பிகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அப் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதை உறுதிப்படுத்தாமல் உரிய நிறுவனத்திற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) நீர்கொழும்பு கடல்நீர் ஏரி அபிவிருத்திச் செயற்திட்டம் தொடர்பாக கடல்நீர் ஏரி அபிவிருத்தி ஆரம்ப விழாவிற்கான செலவினம் ரூபா 13,270,000 பெறுமதியாக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் பெறுகை நடைமுறைக்கு முரணாக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 5,000,000 தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ் விழா நடைபெற்றிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு எந்தவொரு சான்றும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) நீர்கொழும்பு கடல்நீர் ஏரி அபிவிருத்தி விழாவிற்காக நினைவுச் சின்னம் பொறிக்கும் கல்லை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 1,848,000 பெறுமதிக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 1,000,000 முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. நினைவுச் சின்னம் பொறிக்கும் கல்லை நிர்மாணிக்கும் திட்டத்தின் பிரகாரம் கெட்டியான பாறையில் செதுக்கப்பட்ட மீன் மாதிரியொன்று உருவாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2014 பெப்ரவரி 16 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது சீமெந்தால் மேற்ககொள்ளப்பட்ட மீன் மாதிரியொன்று காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சயூரி படகு வாடகைக்கு விடுதல் தொடர்பாக மீளாய்வாண்டின் பெப்ரவரி 23 இல் தனியார் கம்பனியொன்றுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் படகின் உடமைக்காக நாளொன்றிற்கு ரூபா 200,000 விலைவீதத்தில் மீளாய்வாண்டின் 28 நாட்களிற்காக குத்தகைக்குப் பெற்ற கம்பனியிடமிருந்து ரூபா 5,600,000 மொத்த தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் அதில் ரூபா 1,600,000 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. மேலும் உடன்படிக்கை நிபந்தனைகளிற்கு முரணாக எரிபொருள், நீர், ஊழியர் சம்பளங்கள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் படிகளாக செலுத்தப்பட்ட ரூபா 1,409,960 தொகை உள்ளடங்கலாக ரூபா 5,409,960 கூட்டுமொத்த தொகையை அறவீடு செய்வதற்கு 2017 ஒக்தோபர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் வழங்கல் பிரிவில் சேவை செய்யும் போது மோசடியில் ஈடுபட்ட எழுதுவினைஞர் ஒருவரிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் அறவீடு செய்யப்படாமலும் ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படாமலும் 2014 மே 05 இலிருந்து அவர் அதே பிரிவிற்கு மீண்டும் இணைக்கப்பட்டிருந்தார்.

(ஊ) கிரிந்த துறைமுகத்திலுள்ள மணலை அகற்றுவதற்காக 2015 யூன் மாதத்தின் போது கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்த தனியார் நிறுவனமொன்று அந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் 08 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 200,000 தொகையான பிணை வைப்பு கூட்டுத்தாபனத்திற்கு மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை. மேலும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மணல் அகற்றும் நடவடிக்கைகளும் 2015 ஆகஸ்ட் முதல் அந் நிறுவனத்திற்கே கையளிக்கப்பட்டிருந்ததுடன் அம் மணல் அகற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீன்பிடிப் படகுகள் துறைமுகத்தை நெருங்க முடியாதிருந்ததுடன் மீனவர்களுக்கு வசதிகளை வழங்கும் நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட முடியாதிருந்த போதிலும் இது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(எ) 2014 பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் நெறிப்படுத்தல்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) நட்டத்தில் இயங்கும் துறைமுகங்களை இலாபமீட்டும் நிலைக்கு கொண்டுவருவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு, அதற்கான தீர்வுகளைக் கண்டறிந்து இலாபமீட்டும் நிலைக்கு கொண்டுவருவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட எரிபொருளுக்கான பணத்தை அறவீடு செய்தல் மற்றும் 10 வழக்குகள் மற்றும் அறவிடப்படாத கடன் மீதிகள் தொடர்பான தற்போதைய நிலைமை தொடர்பாக அறிக்கைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்குதலை நிறுத்துவதற்காக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அக் குழுவின் தீர்மானத்திற்கு முரணாக மீளாய்வாண்டு வரை கடந்த 02 வருடங்களிற்காக ரூபா 69 மில்லியன் எரிபொருள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

(iv) மோதரை மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரம் இடும் படகுகளில் இருந்து நங்கூரக் கட்டணமாக ரூபா 5,675,373 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) சுற்றறிக்கைகளுக்கு முரணாக சம்பள அதிகரிப்பு செலுத்தப்பட்டமை தொடர்பாக முகாமைத்துவத்தால் அதன் தவறுகளை சரிசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள படிமுறைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் சரியான சம்பளத் தொகுதியைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) முற்கொடுப்பனவு முற்பணங்களின் செயன்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை மற்றும் குழுத் தீர்மானம் என்பவற்றை அமுல்படுத்தாமைக்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) ரூபா 5,065,075 பெறுமதியான 06 எரிபொருள் தாங்கிகளை வழங்குவதற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 2,791,215 முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த எரிபொருள் தாங்கி கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப்பெறாமை தொடர்பாக அதற்குப் பொறுப்பான வழங்கல் முகாமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆலோசனையின் பிரகாரம் ஒழுக்காற்று பரிசோதனையின்றியும் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடாமலும் அந்த வழங்கல் முகாமையாளர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்.

## 6.7 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொடம்தூவ மீன்பிடித் துறைமுக வளாகத்தில் செயற்படுத்தப்பட்ட மண்ணெண்ணை நிரப்பு நிலையத்திற்காக ஹிக்கடுவை மாநகர சபையிடமிருந்து வருடாந்தம் பெறப்பட வேண்டிய 2018 ஆம் அண்டிற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2018 மார்ச் 20 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெவிநுவர புராணவெல்ல மற்றும் காலி மீன்பிடித் துறைமுக வளாகங்களில் அழிக்கப்பட வேண்டிய முறையே 23 மற்றும் 25 கப்பல்கள் குவிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை வளாகத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் வெவ்வேறு சுற்றாடல் பிரச்சனைகள் அதிகரித்திருந்தன.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஊழியர் கடன் முகாமைத்துவம் | (i) ஊழியர் கடனகள், சம்பள முற்பணக் கடன்கள் மற்றும் மருத்துவ உதவிக் கடன்கள் தொடர்பாக கடன் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை. |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | (i) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரிப்பதில் தாமதங்கள் காணப்பட்டமை. |
| | (ii) பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற இனங்காணப்படாத பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை இனங்கண்டு அறவீடு செய்வதற்கும் தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | (iii) நில்வெல்ல மற்றும் குடாவெல்ல மீன்பிடித் துறைமுகங்களின் 02 வெற்றுக் காசோலைகள் கையொப்பமிட்டு பெறப்பட்டிருந்தன. |
| | (iv) நில்வெல்ல மீன்பிடித் துறைமுகத்தின் எழுத்து நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படக் கூடிய இரண்டு பக்க காபன் தாள்கள் பயன்படுத்தப்படாமை. |
| | (v) எரிபொருள் விற்பனை மற்றும் ஏனைய சேவைகளிற்கான பணத்தை அறவிடும் போது முறையான பற்றுச்சீட்டு வழங்கப்படாததுடன் விடய எழுதுவினைஞர்களால் தற்காலிக பற்றுச்சீட்டுக்களின் அடிப்படையில் பணம் |

அறவிடப்படுதல், காசாளர் ஒருவர் காணப்பட்ட போதிலும் அந் நடவடிக்கைகள் விடய எழுதுவினைஞர்களால் மேற்கொள்ளப்படுகின்றமை, பணம் பெற்றதற்கான பெறுவனவு உறுதிச்சீட்டு தயாரிக்கப்படாமை, பாதுகாப்பு பெட்டியில் பணத்தை வைப்புச் செய்யும் போது முறையான கட்டுப்பாட்டு நடைமுறையொன்று பின்பற்றப்படாமை, காசுப் புத்தகமொன்று தயாரிக்கப்பட்டு அது நாளாந்தம் சமப்படுத்தப்படாமை, அதிலுள்ள மீதி கையிலுள்ள காசுடன் இணக்கம் செய்யப்படாமை, ஒதுக்கீட்டு எல்லைகளை விஞ்சி கையில் காசு நிறுத்திவைக்கப்படுதல்.

(vi) கால வரிசையொன்றில் பெறுவனவுகள் கொடுப்பனவுகளிற்கிணங்க காசுப் புத்தகங்கள் பேணப்பட வேண்டியதுடன் அவை நாளாந்தம் சமப்படுத்தப்பட்டு மேற்பார்வையாளர் அல்லது பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (இ) | வருமானக் கட்டுப்பாடு | வருமானத்தை அறவீடு செய்தல் பலவீனமான நிலையில் காணப்பட்டமை. |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சம்பள அதிகரிப்பு மற்றும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் ஆட்சேர்ப்புக்கள் வெளிப்படையின்றி மேற்கொள்ளப்பட்டமை மற்றும் கூட்டுத்தாபனத்தின் இணையத்தளம் நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை மற்றும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாமை. |
| (ஊ) | உள்ளகக் கணக்காய்வு | (i) போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் அறிமுகப்படுத்தப்படாமை.<br>(ii) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் ஒவ்வொரு நடவடிக்கைக்காகவும் தனித்தனியான மனித நாட்களின் எண்ணிக்கைகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்காமை. |
| (எ) | பெறுகை | பெறுகைத் திட்டத்தில் பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகள் போன்ற பெறுகை நடவடிக்கைகள் வகைப்படுத்தப்பட்டிருக்காமை. |